பெயர் : ______________________________

வகுப்பு : ______________________________

பிரிவு : ______________________________

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத்திகழ்பரதக் கண்டமிதில்,
தெக்கணமும் அதிற் சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெரும் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– மனோன்மணியம் பெ. சுந்தரம்பிள்ளை

# ஆத்தி சூடி (அ - ஔ)

அறம் செய விரும்பு

ஆறுவது சினம்

இயல்வது கரவேல்

ஈவது விலக்கேல்

உடையது விளம்பேல்

ஊக்கமது கைவிடேல்

எண் எழுத்து இகழேல்

ஏற்பது இகழ்ச்சி

ஐயம் இட்டு உண்


ஒப்புரவு ஒழுகு

ஓதுவது ஒழியேல்

ஔவியம் பேசேல்

# வெள்ளைப் பசு





தோட்டத்தில் மேயுது
　　வெள்ளைப் பசு – அங்கே
துள்ளிக் குதிக்குது
　　கன்றுக்குட்டி
நாவால் நக்குது
　　வெள்ளைப் பசு – பாலை
நன்றாய் குடிக்குது
　　கன்றுக்குட்டி






## படம் வரைக

(பசு, மாட்டுக்கொட்டகை, புல், கன்றுக்குட்டி)

# மெய் எழுத்துகள்

| | | |
|---|---|---|
| க் |  | சக்கரம் |
| ங் |  | மாங்காய் |
| ச் |  | பச்சைக்கிளி |
| ஞ் |  | ஊஞ்சல் |
| ட் |  | பெட்டி |
| ண் |  | கண் |
| த் |  | கத்தி |
| ந் |  | பந்து |
| ப் |  | கப்பல் |

| | | |
|---|---|---|
| ம் |  | பம்பரம் |
| ய் |  | நாய் |
| ர் |  | தேர் |
| ல் |  | பல் |
| வ் |  | செவ்வாழை |
| ழ் |  | தாழ்ப்பாள் |
| ள் |  | பள்ளி |
| ற் |  | நாற்காலி |
| ன் |  | மான் |

# படம் பார்த்து கதை சொல்/



சிவப்பு எறும்பு ஊர்ந்திருக்கு

பச்சை வயல் பரந்திருக்கு

கருப்பு காகம் அமர்ந்திருக்கு


மஞ்சள் பூசணி படர்ந்திருக்கு

நீல வானம் விரிந்திருக்கு

ஊதா பூக்கள் பூத்திருக்கு

வெள்ளைக் கொக்கு காத்திருக்கு


உலகில் வண்ணம் பல இருக்கு













நிலா நிலா ஓடி வா!
நில்லாமல் ஓடி வா!
மலை மேலே ஏறி வா!
மல்லிகைப்பூ கொண்டு வா!





காக்கா, காக்கா கண்ணுக்கு
மை கொண்டு வா!



குருவி குருவி கொண்டைக்குப்
பூ கொண்டு வா!



கொக்கே, கொக்கே குழந்தைக்குத்
தேன் கொண்டு வா!

கிளியே, கிளியே கிண்ணத்தில்
பால் கொண்டு வா!




# க

கப்பல்



கதவு





கடல்

# ங

எங்ஙனம்

அங்ஙனம்

இங்ஙனம்

# ச

சர்க்கரை



சணல்



சந்திரன்



# ஞ

ஞமலி

அறிஞர்


கலைஞர்

# ட

குடம்



படம்




பட்டம்



# ண

மணல்



பணம்



உணவு




# த

தங்கம்



தக்காளி





தண்ணீர்

# ந

நரி



நகம்





நண்பன்

# வீட்டு விலங்குகள் / Domestic Animals



பசு



நாய்



பூனை




ஆடு




குதிரை



பன்றி



முயல்



கழுதை

# காட்டு விலங்குகள் / Wild Animals



சிங்கம்



புலி



சிறுத்தை




குரங்கு




பாம்பு



கரடி



ஒட்டகச்சிவிங்கி





யானை




மான்

## வடிவங்களுக்கு ஏற்ற படம் வரையவும் /
## Draw objects for the given shapes

வட்டம் 

சதுரம் 

முக்கோணம் 

செவ்வகம் 

# ப

பனித்துளி



பறவை




படகு



# ம

மயில்



மரம்



மஞ்சள்



# ய

தையல்



வயல்





பயறு

# ர

ரசம்



ரத்தினம்





ரம்பம்

# ல

வெல்லம்



லட்டு





அலகு

# வ

வண்டு



வண்டி




வணக்கம்



# ழ

பழம்



குழந்தை





உழவன்

# ள

பள்ளம்



வெள்ளம்



விளக்கு



# ற

பறவை



முறம்






இறகு

# ன

வனம்



வானம்



அன்னம்



# எண்கள் பாட்டு

1. ஒன்று – யாவர்க்கும் தலை ஒன்று



2. இரண்டு – முகத்தில் கண் இரண்டு



3. மூன்று – முக்காலிக்குக் கால் மூன்று




4. நான்கு – நாற்காலிக்குக் கால் நான்கு



5. ஐந்து – ஒரு கை விரல் ஐந்து



6. ஆறு – ஈயின் கால் ஆறு



7. ஏழு – வாரத்தின் நாள் ஏழு





8. எட்டு – சிலந்தியின் கால் எட்டு



9. ஒன்பது – தானிய வகை ஒன்பது



10. பத்து – இருகை விரல் பத்து



# பூக்கள் / Flowers



ரோஜா



மல்லிகை



தாமரை



அல்லி



அரளி



செம்பருத்தி



டிசம்பர் பூ



முல்லை



சாமந்தி



கனகாம்பரம்



செண்பகப்பூ



சூரிய காந்தி

# ஆறு சுவைகள்

| | | | |
|---|---|---|---|
| பலாப்பழம் | இனிக்கும் | இனிப்பு |  |
| மாங்காய் | புளிக்கும் | புளிப்பு |  |
| பாக்கு | துவர்க்கும் | துவர்ப்பு |  |
| உப்பு | உவர்க்கும் | உவர்ப்பு |  |
| மிளகாய் | காரும் | கார்ப்பு |  |
| பாகற்காய் | கசக்கும் | கசப்பு |  |

| ஒருமை/ Singular | பன்மை / Plural |
|---|---|
| பூ  | பூக்கள்  |
| மரம்  | மரங்கள்   |
| புத்தகம்  | புத்தகங்கள்  |
| குழந்தை  | குழந்தைகள்  |



வட்டமான தட்டு
தட்டு நிறைய லட்டு
லட்டு மொத்தம் எட்டு
எட்டில் பாதி விட்டு
எடுத்தான் மீதி கிட்டு


மீதம் உள்ள லட்டு
முழுதும் தங்கை பட்டு
போட்டாள் வாயில் பிட்டு

கிட்டு நான்கு லட்டு
பட்டு நான்கு லட்டு
மொத்தம் தீர்ந்தது எட்டு
மீதம் காலித் தட்டு


பச்சைக் கிளியே வா வா!
பாலும் சோறும் உண்ண வா!
கொச்சி மஞ்சள் பூச வா!
கொஞ்சி விளையாட வா!
பைபப் பையப் பறந்து வா!
பாடிப் பாடிக் களித்து வா!
கையில் வந்து இருக்க வா!
கனி அருந்த ஓடி வா!



# உடல் உறுப்புகள்/ Parts of the body




# முதல் எழுத்தை வட்டமிடுக/
# Circle the beginning letter



| | | |
|---|---|---|
| அ | க | உ |



| | | |
|---|---|---|
| ச | ஈ | உ |



| | | |
|---|---|---|
| ஐ | ஆ | ப |




| | | |
|---|---|---|
| ஒ | ந | த |



| | | |
|---|---|---|
| எ | இ | த |



| | | |
|---|---|---|
| ஏ | ம | ஆ |



| | | |
|---|---|---|
| ஊ | ர | ஈ |



| | | |
|---|---|---|
| ல | எ | இ |



| | | |
|---|---|---|
| ஒ | ஆ | வ |

## வினாவும் விடையும் / Question and Answers

பூ! என்ன பூ?
வாழைப்பூ
என்ன வாழை?
கல் வாழை
என்ன கல்?
குண்டுக்கல்
என்ன குண்டு?
கோலிக்குண்டு

தேன் தேன்!
என்ன தேன்?
கொம்புத் தேன்
என்ன கொம்பு?
மான் கொம்பு
என்ன மான்?
காட்டு மான்
என்ன காடு?
ஆற்காடு



நத்தையாரே! நத்தையாரே!
அத்தை வீடு பயணமோ?
அத்தை வீடு போக முதுகில்
தண்ணீர் குடம் வேணுமோ?
அத்தையார்க்கு நீர் சுமக்கும்
நத்தையாரே வாருங்கள்
மெத்த வழியில் நீரும் சிந்தும்
மெல்ல மெல்லச் செல்லுங்கள்

# குடும்ப மரம் / Family Tree




| | | | |
|---|---|---|---|
| தாத்தா | அப்பா | அண்ணன் | தம்பி |
| பாட்டி | அம்மா | அக்கா | தங்கை |

வாரும் வாரும் மயிலின் அழகைப்பாரும்
வாரும் வாரும் வந்து பாருமே
மயிலின் கொண்டையின் அழகைப்பார் – 2
கொண்டையைப் பார் ஓ......
வாரும் வாரும்.......
மயிலின் மூக்கின் அழகைப் பார் – 2
மூக்கைப் பார் கொண்டையைப் பார் ஓ.......
வாரும் வாரும் .......
மயிலின் கண்ணின் அழகைப் பார் – 2
கண்ணைப் பார், மூக்கைப் பார், கொண்டையைப் பார் ஓ.....
வாரும் வாரும் .......
மயிலின் கழுத்தின் அழகைப்பார் – 2
கழுத்தைப் பார், கண்ணைப் பார், மூக்கைப் பார், கொண்டையைப் பார் ஓ.....
வாரும் வாரும் .......
மயிலின் தோகையின் அழகைப் பார் – 2
தோகையைப் பார், கழுத்தைப் பார், கண்ணைப் பார், மூக்கைப் பார், கொண்டையைப் பார் ஓ...
வாரும் வாரும் .......
மயிலின் வயிற்றின் அழகைப் பார்
வயிற்றைப் பார், தோகையைப் பார், கழுத்தைப் பார், கண்ணைப் பார், மூக்கைப் பார், கொண்டையைப் பார் ஓ...
வாரும் வாரும் .......
மயிலின் காலின் அழகைப் பார் –2
மயிலின் காலின் அழகைப் பார்
காலைப் பார், வயிற்றைப்பார், தோகையைப் பார், கழுத்தைப் பார், கண்ணைப் பார், மூக்கைப் பார், கொண்டையைப் பார் ஓ...
வாரும் வாரும் மயிலின் அழகைப்பாரும்
வாரும் வாரும் வந்து பாருமே!

## உயிர் எழுத்துகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
| எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |

## மெய் எழுத்துகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் | ங் | ச் | ஞ் | ட் | ண் |
| த் | ந் | ப் | ம் | ய் | ர் |
| ல் | வ் | ழ் | ள் | ற் | ன் |

## உயிர்மெய் எழுத்துகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க | ங | ச | ஞ | ட | ண |
| த | ந | ப | ம | ய | ர |
| ல | வ | ழ | ள | ற | ன |

## மாதங்கள் / Months of the year

1. சித்திரை
2. வைகாசி
3. ஆனி
4. ஆடி
5. ஆவணி
6. புரட்டாசி
7. ஐப்பசி
8. கார்த்திகை
9. மார்கழி
10. தை
11. மாசி
12. பங்குனி